**அசல் வழக்கு எண்.19/2021**

**தேதி: 21.08.2025.**

**வா.சா.1: திரு. சீனிவாசன், த/பெ. பன்னீர்செல்வம்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

பொதுவாக கிரைய ஒப்பந்தங்கள் எத்தனை நகல்கள் எடுக்கப்படும் என்றால் 2 எடுக்கப்படும், ஒன்று என்னிடமும் மற்றொன்று எதிர் தரப்பினருக்கும் கொடுக்கப்படும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் General Merchant வியாபாரம் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேனா என்றால் செய்கிறேன். 05.03.2021 அன்று வில்லங்க சான்றிதழ் ஆன்லைனில் சரிபார்த்தேனா என்றால் சரிதான். அதற்கு முன்பே இது சம்மந்தமாக DSP Office-ல் புகார் கொடுத்தேன்.

28.08.2018 அன்று சந்திரசேகரன் என்பவர் பாண்டுரங்கன் என்பவருக்கு கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு 23.01.2020 அன்று பாண்டுரங்கன் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு அந்த சொத்தை அடமானம் வைத்தார் என்றால் சரிதான். 01.09.2018 அன்று ராமலிங்கம் பத்து லட்சம் ரூபாயை எனக்கு வங்கியின் மூலம் RTGS வாயிலாக எனக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரிதான், மீதி ரொக்கமாக கொடுத்த பத்து லட்ச ரூபாயை நான் திருப்பிக் கேட்ட போது, அசல் கிரைய ஒப்பந்த பத்திரத்தை என்னிடமிருந்து பெற்றுக் கொண்டு பிறகு ரொக்க தொகையான ரூபாய் பத்து லட்சத்தை திருப்பி தருவதாக கூறினார்.

கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்ய முடியாது என்று எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் அவருடைய தம்பி பெயருக்கு தான செட்டில்மெண்ட்

செய்த பிறகு தான் எனக்கு முழுமையாக தெரிய வந்தது. நான் என்னுடைய தாவாவில் சொல்லியுள்ளவாறு 2020ஆம் வருடத்திற்கு முன்பே தெரியும் என்பது சரியா என்றால் அதற்கு முன்பே பிரதிவாதி அவருடைய தம்பி பெயருக்கு தான செட்டில்மெண்ட செய்து வைத்த விவரம் எனக்கு செவி வழி செய்தியாக தெரியும்.

01.09.2018 பிறகு நான் கொடுத்த ரூபாய் பத்து லட்சத்திற்கான வட்டியாக 9 சதவீதம் கேட்கிறேன் என்றால் சரிதான். ராமலிங்கம் என்னிடம் தாவா சொத்தை விற்பதாக என்னிடம் எந்த ஒரு கிரைய ஒப்பந்தமும் போடவில்லை என்றாலும், ராமலிங்கம் என்னிடம கடனாக தான் ரூபாய் பத்து லட்சம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே ராமலிங்கம் என்பவர் என்னிடம் கடனாக ரூபாய் 20 லட்சம் பெற்றிருந்தால் 26.04.2017 முதல் வட்டி கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

எனக்கு 26.04.2017 முதல் 01.09.2018 வரை ராமலிங்கம் வாங்கிய கடனுக்காக 40 ஆயிரம் ரூபாய் எனக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு வேண்டிய DSP வந்த பிறகு ராமலிங்கத்தை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல (வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் இந்த கேள்வி பதிவு செய்யப்படுகிறது).

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.